உ

சிவமயம்



அமரர் உயர்திரு

சின்னத்துரை வேலாயுதம் J.P.

அவர்களின்

# நினைவு மலர்

In Loving memory of

Late Mr.

Sinnathurai Velayutham J.P.

**06 - 09 - 1997**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

அமரர். உயர்திரு

# சின்னத்துரை வேலாயுதம் J. P.

அவர்கள்



அன்புடன் பூவுலகில் 09 - 04 - 1919

அருளுடன் விநாயகரிடம் 07 - 08 - 1997

## ★ பிள்ளையாரும் அப்பாவும் ★

பிள்ளையார் அப்பா நீ பிள்ளையார் அப்பா
கருணையின் வடிவமே நீ பிள்ளையார் அப்பா
ஆடி அபரபட்ச விநாயகர் சதுர்த்தியில்
பிள்ளையார் அப்பா
எங்கள் அப்பாவை நீ பிள்ளையார் அப்பா
ஆக்கிவிட்டாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன்
முதற்றே உலகு"

அன்பே உருவான சின்னத்துரை அவர்கட்கும், அவர் தம் துணைவியார் சீதேவன் அம்மையார் அவர்கட்கும் 1919 ம் ஆண்டு சித்திரைத் திங்கள் 9 ம் நாள் ஓங்கார வடிவமே உருவான விநாயகப் பெருமான் அருளால் வெற்றிக்கு வேலாயுதம் என்றவாறு வேலாயுதம் அவர்கள் தமது பூவுலக சஞ்சாரத்தைத் தொடங்கினார்கள். இவருக்கு ஓர் அருமைத் தம்பி சண்முகம் அவர்கள் சில ஆண்டுகளின் பின் தோன்றினார்கள். யாழ்ப்பாணத்தி லுள்ள பொலி கண்டியைச் சொந்த இடமாகக் கொண்ட போதிலும் தந்தையாரின் உத்தியோகம் காரணமாக, திருஞானசம்பந் தப் பெருமானின் ஞானக்கண் பார்வையால் தரிசிக்கப் பட்டு பதிகம் பாடப் பெற்ற கோணேஷ்வரப் பெருமான் குடி கொண்ட திருகோணமலையில் பிறந்து தமது குழந் தைப் பருவம் முதல் வாலிபப் பருவம் வரை கழித்தார்கள்.

சிறுவயதிலேயே தனது உற்றார் உறவினர்களோடு அன்புடனும், பண்புடனும் பழகி அவர்கள் தம் அன்பை யும் பெருமதிப்பையும் பெற்றார். திருகோணமலையிலுள்ள இந்துக் கல்லூரியில் ( Hindu College ) தமது ஆரம்பக் கல்வி முதல் லண்டன் மெட்ரிகுலேஸன் ( London Metri culation ) வரை பயின்றார்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க
அதற்குத் தக———"

என்பதற்கு ஏற்றவாறு தனது கல்வியைச் சீரும் சிறப் புடனும் கற்று அதற்குத் தகுந்தவாறு நடைமுறையிலும் நிரூபித்து வந்தார் கல்லூரியில் சிறந்த பல கல்வி விருது களையும் பெற்றார். கல்வியில் எவ்வாறு சிறப்புடன் திகழ்ந்தாரோ அதே போல் விளையாட்டிலும் தனது பாரிய திறமையைக் காட்டினார்.

தனது 15 வது வயதில் கல்லூரி உதைபந்தாட்டம் (College football) மற்றும் கிரிக்கட் டீம் (Cricket team) களில் விளையாடி தனக்கும் கல்லூரிக்கும் சிறப்பைத் தேடிக் கொடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலாயுதம் அவர்களின் விளையாட்டுத் திறமையைக் கண்டு மெச்சிய றோயல் விமானப்படையினர் (Royal Airforce) கல்லூரி அதிபரை அணுகி, வேலாயுதம் அவர்களை றோயல் விமானப்படை இலங்கையில் (Royal Airforce Ceylon) பணி புரியுமாறு கேட்டுக் கொண்டார்கள். அதிபரின் கருத்துப்படியே வேலாயுதம் அவர்கள் றோயல் விமானப் படையில் (Royal Airforce) தமது முதலாவது உத்தி யோகத்தை 17 வது வயதில் தொடங்கினார்கள்.

தமது 26 வது வயதில் சங்கரப்பிள்ளை, தையல்முத்து ஆகியோரின் சிரேஷ்ட மகளாகிய குணநிதி அம்மையா ரைக் கைப்பிடித்தார். இல்லறம் நல்லறம் என்றமுதுமொழிக்கு ஏற்றவாறு தமது இல்லறத்தை நடத்தி வந்தார்கள். இவர் களுக்கு தையல்நாயகி, சுரேந்திரநாதன், சோதிநாதன் என ஓர் அருமைப் பெண் குழந்தையையும் இரண்டு ஆண் குழந் தைகளையும் இறைவன் அன்புடன் அளித்தார்.

பிரித்தானியர் (British) ஆட்சியில் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்து றோயல் விமானப்படை (Royal Airforce) இலங்கையில் மூடப்பட்ட போது இங்லண்டில் (England) வந்து பணி புரியும் படி வேலாயுதம் அவர்கள் கேட்கப்பட்டார்கள். உற்றார் உறவினர்களை விட்டு நெடுதூரம் செல்லப்பிரியமில்லாத வேலாயுதம் அவர்கள் தனது விமானப்படை (Airforce) உத்தியோகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு கணக்காளராக (Accountant) கற்று அம்பாறையில் கனடியன்களால் (Canadian) உருவாக்கப்பட்ட ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபை, அம்பாறையில் (River Vallegs Development Board, Amparai) கணக்காளராக (Accountant) 1959 ம் ஆண்டு பணி ஏற்றார்.

பிள்ளைகளின் கல்வியில் கண்ணும் கருத்துமாக இருந் தார். தனது மூன்று பிள்ளைகளுக்கும் பல்கலைக்கழகக் கல்வி அளித்து மகிழ்ந்தார். தன் பிள்ளைகளின் கல்வியில் மட்டும் அல்லாது தமது உறவினர்களின் பிள்ளைகளின் கல்விக்கு பெரிய ஊக்கம் அளித்தார். தற்போது பல்க லைக்கழகத்தில் கற்றுக் கொண்டு இருக்கும் சவுந்தரராஜன் பெரிய அப்பாவின் கருணை கொண்ட அன்பு உள்ளத்தைக் கண்டவர்களில் ஒருவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருமைத் தம்பியுடன்

வேலாயுதம் அவர்களும், அவர்தம் அருமைத் தம்பி சண்முகம் அவர்களும் ஒருவர் மேல் ஒருவர் அளவு கடந்த, அன்பு கொண்டவர்கள். அண்ணருக்கு அருகே அமர்ந்து இருப்பதையே மரியாதைக் குறைவாகக் கருதும் தம்பியைக் காணலாம். அதற்கு ஏற்றால் போல் வேலாயுதம் அவர்களும் தனது தம்பியாரின் சிறப்புக்காக எப்போதும் செயற் பட்டார். தனது தம்பியாரின் பிள்ளைகளும் பல்கலைக் கழகம் சென்று கற்கவேண்டும் என்று ஆசைப்பட்டார். அவரின் ஆசைப்படியே தனது காலத்தில் அதையும் கண்டு களித்தார். தம்பியாரின் பிள்ளைகள் பத்மாவதி, கோணேஷ்வரி. பாலேஷ்வரி மூவரும் பெரிய அப்பா வேலா யுதம் அவர்களில் தனிப்பற்றுக் கொண்டவர்கள்.

## அன்பு மைத்துனருடன்

வேலாயுதம் அவர்களின் மைத்துனர் கோடீஸ்வரன் அவர்கள் ஒரு போதும் மைத்துனர் என்ற முறையில் பழ கியது கிடையாது. அன்பும் பாசமும் கொண்ட ஓர் சகோ தரனாகவே திகழ்ந்தார். அத்தான் சொன்னால் அதில் பெரியதோர் அர்த்தம் உண்டு என்ற நம்பிக்கை கொண் டவர்கள் கோடீஸ்வரன் அவர்கள். கோடீஸ்வரன் அவர் களது பேச்சுத்திறமையும், காரியத் திறமையும், உலகம் அறிந்ததே. இவரின் வெற்றிக்கும், வீரத்திற்கும் எப்போதும் வேலாயுதம் அவர்கள் பக்க பலமாக அன்புடன் இருந்தார் கள். இப்பேற்பட்ட அன்பு உள்ளம் படைத்த, பண்புடன் வீரமும் கொண்ட மைத்துனர்களை உலகில் காணல் அரிது. வேலாயுதம் அவர்கள் இறைவனடி யடைந்த செய்தியை அறிந்தவுடன் கோடீஸ்வரன் அவர்கள் கூறியது "அத்தானின் நல்ல உள்ளத்திற்கும்; குணத்துக்கும், தருமத் திற்கும் ஆண்டவன் அவருக்கு நிறைவான அமைதியைக் கொடுப்பாராக.

## பண்பு மருமக்களுடன்

வேலாயுதம் அவர்கள் தமது மருமக்கள் ஜெயந்திரா தவராஜா, புனிதவதி, நளாயினி ஆகியோரை மருமக்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு போதும் கருதியது கிடையாது. தனது மக்களாகவே மதித்து அவர்கள் மேல் அன்பு காட்டினார். அதற்கு ஏற்றால் போல் மருமக்களும் வேலாயுதம் அவர்களை மாமா என்று கூப்பிட்டது கிடையாது. ஐயா என்றே கூப்பிடுவார்கள். இது மட்டுமல்ல தமது தந்தையைப் போல் கருதி அன்புடன் அவருக்குச் சேவை புரிந்தார்கள்.

## ஆசை பேரன் பேத்தியருடன்

ஒரு பேத்தியையும் (லோகமாதங்கி) இரண்டு பேரன்களையும் (வாகிஷ், வினோஜ்) கண்டு மகிழ்ந்தார். அவர்களின் எதிர்காலச் சிறப்பிற்காக எப்போதும் நல்ல அறிவுரைகள் தந்தார்.

## பொதுச்சேவையில்

வேலாயுதம் அவர்களின் நற்பண்பிற்கும் மற்றும் காரியதிறமைக்கும் விருது கொடுத்தால்போல், இவர் அம்பாறை மாவட்ட நீதிமன்றத்தால் அவரின் 55 வது வயதில் சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டார். அன்புடன் பொது சேவை புரிவதில் சளைத்தது கிடையாது. இனமத வேறுபாடின்றி செயற்பட்டு எல்லோரினதும் நல் அன்பிற்கும் உரியவரானார்.

இலங்கை விளையாட்டுத் துறைக்கும் பல சேவைகள் புரிந்தார். அம்பாறை மாவட்டத்தின் அகில இலங்கைக்கான Cricket மற்றும் football வீரர்கள் தெரிவுக்குழுவின் தலைவராகப் பலவருடங்கள் சேவை புரிந்தார். வேலாயுதம் அவர்களின் பொது சேவையைக் கூறுவதானால் எத்தனையோ பக்கங்கள் எழுதிக்கொண்டே போகலாம். பண்பில் உயர்ந்தவராகவும் நிதானத்திற் சிறந்தவராகவும் திகழ்ந்தார். ஜீவகாருண்யம் மிக்கவர் எல்லோருக்கும் என்றும் நல்லதையே செய்யவேண்டும் என்ற மனப்பாங்கு கொண்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயப்பற்றும் இறை வழிபாடும்

அகில இலங்கை இந்து வாலிபர் சங்கத்தின் காரிய தரிசியாகப் பல ஆண்டுகள் சேவை புரிந்தார். அம்பாறையில் விக்கினங்கள் தீர்க்கின்ற வினாயகப் பெருமான் அருளால் ஓர் பிள்ளையார் ஆலயம் உருவாக்குவதில் மிகவும் முக்கியமாக செயற்பட்டவர்களில் இவரும் ஒருவர். வினாயகப் பெருமானில் அளவுகடந்த பக்தியும் அன்பும் கொண்டிருந்தார். வினாயகரையே எப்போதும் வழிபடுவார். அவருடைய விருப்பப்படியே தமது 78 வது வயதில் ஆடி மாத அபருபட்ச வினாயகர் சதுர்த்தியில் எம்பெருமானின் திருவடியைச் சென்று அடைந்தார்.

"தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மலரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமில நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிழவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோத நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே.

மாதர்ப் பிறைக்கண்ணி யானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல்
ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங்
களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்ட நீ யருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என் றருள்புரி யாயே

மெய்தானரும்பி விதிர்விதிர்த்துன் விரையார் கழற்கென்
கைதான தலைவைத்துக் கண்ணீர்ததும்பி வெதும்பி
உள்ளம்
பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றி சயசய போற்றி
யென்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக் கண்டு
கொள்ள

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

அடியார் ஆனீர் எல்லீரும் அகலவிடுமின் விளையாட்டைக்
கடிசேர் அடியே வார்தடைந்து கடைக்கொண்டிருமின்
திருக்குறிப்பைச்
செடிசேர் உடலைச் செலநீக்கிச் சிவலோகத்தே நமை
வைப்பான்
பொடிசேர் மேனிப் புயங்கன்தன் பூவார்கழற்கே
புகவிடுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திரு விழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண்டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந்தனவே.

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

இடர்கெடுத் தென்னை யாண்டு கொண்டென்னுள் இருட்பிழம் பறவெறித் தெழுந்த
சுடர்மணி விளக்கினுள்ளொளி விளங்குந் தூயநற் சோதியுட் சோதி
சுடல் விடைப் பாகா அம்பலக் கூத்தா அயனொடு மாலறி யாயைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத் தொண்டனேன் பணியுமா பணியே.

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழை சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெரே அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங்கப் பெருமான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளமே மகுடம் பவளமே திருவாய்
பவளமே திருவுடம்பதனில்
தவளமே களபம் தவளமே புரிநூல்
தவளமே முறுவல் ஆடரவந்
துவளுமே கலையுந்துகிலுமே யொருபால்
துடையிட மருங் கொருத்தி
அவளுமே யாகில் அவரிடங்களந்தை
அணிதிகழாதித்தேச் சரமே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம் பெருகி
விழாவொலி விண்ணள வும் சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடும் கூடி எம்
மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிண்டுமனத்தவர் போமின்கண்
மெய்யடியார்கள் விரைந்துவம்மின்
கொண்டும் கொடுத்துங் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங்கடந்த பொருள் அளவில்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொரு
ளென்றே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக்கோல நீடியருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பரவியோம் மாகுந் திருச்சிற்றம்பலத்துணின்று
பொற்புடனடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய விருள்நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றி னொளிவிளங்க
அரந்தை கெடப் புகலியர்கோ னமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி

தாவறு முலகெலாந் தந்த நான்முகத்
தேவுதன் றுணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதோ றிருந்திடு நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசை புனைந்து போற்றுவாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவிரு முகங்கள் போற்றி
முகம் பொழி கருணைபோற்றி
ஏவருந் துதிக்க நின்ற
ஈராறு தோள்கள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள்
மலரடி போற்றியன்னான்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கை வேல் போற்றி போற்றி

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேன்
உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்
மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ்
இருக்க என்றார்

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே

இசைந்த ஏறுங்கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்குநூலும் புலியதளாடையும் மழுமானும்
அசைந்த தோடும் சிரமணி மாலையும் முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன்மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரறமுனிவோனே
உகந்தபாசக் கயிறொரு தூதுவர் நலியாதே
அசைந்தபோதென் துயர் கெடமாமயில் வரவேணும்
அமைந்தவேலும் புயமிசைமேவிய பெருமானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக - னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி - லுறைபவர்
கற்பக மெனவினை - கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய - மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு - பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட வெழுதிய - முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடி செய்த- அதிதீரா
அத்துய ரது கொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை - இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் - பெருமானே.

திருமக ளுலாவு மிருபுய முராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
ஜெகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதரு குமாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில் விளையாடு
மரகத மயூரப் பெருமாள்காண்
மணிதர ளம்விசி அணியருவி சூழ
மருவு கதிர்காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படவசு ரர்மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவு பிறை வாரி விரவுசடை வேணி
அமலர் குருநாதப் பெருமாள்காண்
இருவினையி லாத தருவினை விடாத
இமையவர் குலேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியி னதிபார
இருதனவி நோதப் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவினையின் மதிமயங்கித் திரியாதே
யெழு நரகிலுழலு நெஞ்சத் தலையாதே
பரமகுருவருள் நினைந்திட்டுணர்வாலே
பாவு தரிசனையை யென்றற் கருள்வாயே
தெரிதமிழை உதவுசங்கப் புலவோனே
சிவனருளு முருக செம்பொற் கழலோனே
கருணைநெறி புரியுமன்பர்க் கெளியோனே
கனகசபை மருவு கந்தப் பெருமாளே.

## சிவபுராணம்

### திருச்சிற்றம்பலம்

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சி னீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவ னடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க

ஈச னடி போற்றி எந்தையடி போற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய உரைப்பனியான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய்த் தணியாய் இயமான னாம்விமலா
பொய்ய யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்களிய நின்ற மறையோனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ்ஞானத்தாற்கொண்டுணர்வார்தங்கருத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும்வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச்சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனேஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

தொல்லை உரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

திருச்சிற்றம்பலம்

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பின் பிறப்பிடமாய் பாசத்தினுறைவிடமாய்
மண்பற்றுடன் வாழ்ந்த மங்களத்திருவுருவே அமரராய்
விண்சென்ற எங்கள் குடும்ப விடிவெள்ளியே என்
எண்ணத்தில் குடிகொண்ட இதயத் தெய்வமே
வீண்பகை கோபம் நெஞ்சத்தில் வஞ்சம்
வேண்டாம் வாழ்வில் என்று எனக்குப் பல
மாண்புள்ள அறிவுரைகள் அழுத்திச் சொல்லி
ஆண்டவனிடம் சென்ற அணையாத் தீபமே
அரிய அன்புருவே என்னாசைத் திலகமே பாசம்
சொரிய அரவணைத்துச் சீராட்டி பாராட்டி யென்
உரிய கல்விக்கு ஊக்கம் மிக அளித்த
பிரியமுள்ள பெரியப்பாவாம் பெருந்தகைக்கு
அஞ்சலிகள் அஞ்சலிகள் என் இதய அஞ்சலிகள்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

அன்பு மகன்
ராஜ் – இலண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மறவோம்
# நாளும் நினைவோம்

அமரத்துவம் அடைந்த திருவாளர் சின்னத்துரை வேலாயுதம் அவர்களின் ஈமக் கிரியைகளிற் கலந்து கொண்டு ஆறுதல்களும், தேறுதல்களும் நல்கியவர்களுக்கும் அஞ்சல் மூலம் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் மேலும் பலவிதமான சரீர உதவிகளைச் சலியாது புரிந்துள்ள அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்புடன்

**மனைவி, மக்கள்**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

இல: 15,
றொசாய்றோ வீதி,
மட்டக்களப்பு.

சென். செபஸ்தியார் அச்சகம், மட்டுநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org